சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 22.07.2025
ம.சா.2 – பிரபு S/o. வீரன்செட்டியார்
MCOP No.8/2024 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

இறந்த கார்த்திக் என்னுடைய ஊரைச்சார்ந்தவர் என்றால் சரிதான். விபத்து காலை சுமார் 7 மணியளவில் நடந்தது என்றால் சரிதான். நான் காலை நேரத்தில் நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த போது எதிர் திசையில் வந்த கார்த்திக்கு இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து கிடந்தார் அதை நான் நேரடியாக பார்த்தேன். கார்த்திக் அடிபட்டு கீழே விழுந்து கிடந்ததை தான் நான் பார்த்தேன். கார்த்திக் அடிபட்டு கீழே விழுந்து கிடந்தார் என்றும் அவர் மீது வாகனம் மோதியதா என்றால் இல்லை. கார்த்திக் என்பவர் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற நபர் என்றால் சரிதான். கார்த்திக் என்பவர் இருசக்கர வாகனத்தின் பின்னால் இருபுறமும் காலை போட்டு உட்கார்ந்திருந்தாரா அல்லது ஒருபுறமாக காலை போட்டு உட்கார்ந்திருந்தாரா என்றால் தெரியாது. இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றவர் அருண்பாண்டியன். அவரும் கார்த்திக்கின்ஊரைச்சார்ந்தவர் தான் அவருக்கு அடிபடவில்லை. கார்த்திக்குக்கு தான் தலையில் அடிபட்டு இருந்தது. விபத்து எவ்வாறு நடந்தது என்பது தெரியாது என்றும் கீழே விழுந்த நபரை தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் காவல்துறைக்கு தகவல் எதுவும் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் அவருடைய மனைவியான செல்விக்கு தகவல் கொடுத்தேன். கார்த்திக் அடிபட்டு கீழே கிடந்தவுடன் அவருடைய மனைவிக்கு தகவல் சொன்ன பிறகு அவரது உடைகளை மாற்றுவதற்காக அவரது வீட்டிற்கு அழைத்து செல்லப்பட்டார். அதன்பிறகு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. அவருக்கு தலையில் ரத்தம் வந்ததா என்றால் இல்லை.

அதன்பிறகு கார்த்திக் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு, அதன்பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். இதுதொடர்பாக காவலர்கள் என்னிடம் விசாரணை நடத்தினார்கள். இதுதொடர்பாக வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதேனும் அளிப்பதற்காக அழைக்கப்பட்டேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய திசையில் கார்த்திக் பயணித்தார் என்று குறிப்பிட்டு விட்டு தற்போது முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.22 07:51:43 +0530

Sub Judge

Melur